பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: மார்கழி 6 (21—12—71) செவ்வாய் வெளியூர்: மார்கழி 7 (22—12—71) புதன் [இதழ்: 158

வங்க தேசத்துக்கு இந்தியத் தூதர்

டி. பி. தார் நியமனம்

கல்கத்தா, டிச. 21—
வங்க தேசத்திற்கு இந்தியாவின் தனித் தூதுவராக டி.பி. தார் நியமிக்கப்படலாம்.

இத்தகவலைத் தெரிவித்த மத்தியக் கல்வி அமைச்சர் சித்தார்த்த சங்கர் ராய், 'இன்னும் ஓரிரு நாட்களில் டி.பி. தார் டாக்கா செல்வார்' என்று கூறினர்.

இந்திய வெளியுறவுத் துறையின் கொள்கை வகுக்கும் குழுவின் தலைவராக தார் இருந்துவருகிறர்.

பாகிஸ்தானில் புதிய மாற்றங்கள்

பூட்டோ நடவடிக்கை அமைதிக்கு வித்திடுமா?

நிலைமையை இந்திய அரசு உன்னிப்பாகக் கவனிக்கிறது

புதுடில்லி, டிச. 21—
பாகிஸ்தானில் ஏற்பட்டுவரும் புதிய மாற்றங்களை இந்தியா உன்னிப்பாகக் கவனிததுக்கொண்டு வருகிறது.

எப்போதுமே இந்திய விரோதக் கொள்கையையும் -- இசுலாமிய சோஷலிசத்தையும் கொண்டிருக்கும் பூட்டோவின் வருங்கால நடவடிக்கையைப் பொறுததே இந்தியத துணைக் கண்டத்தின் வருங்கால அமைதி அமையவிருக்கிறது.

பாகிஸ்தானில் இப்போது இந்தியாவுக்குத் தூதுவர் உறவு இல்லை; ஆகவே, அங்கு நடைெறும நிகழ்ச்சிகளை ந புநாடுகளின் தகவல்கள் மூலமே இந்தியா அறிந்து வருகிறது.

பூட்டோவால் முழுக்க முழுக்க சனநாயக முறையில் ஆட்சி நடத்த முடியுமா அலலது இராணுவத தலைவர்களின் சொற்படி நடக்கும் பொம்மைத் தலைவராக இருப்பாரா என்பதெல்லாம் போகப் போகத்தான் தெரிய வேண்டும்; இதுவரை அனுபவித்து வந்த 'அதிகார ருசி'யை அவ்வளவு விரைவில் விட்டுககொடுக்க இராணுவத்தினர் ஒப்புவார்கள் என்பதைப் பலரும் நம்பவில்லை.

போரில் படுதோல்வி ஏற்பட்டுவந்ததை யாகியாகான் ஆட்சி, தன் நாட்டு மக்களுக்குத் தெரிவிககவே இல்லை; பாகிஸ்தான் படைகள் வெற்றி பெற்று வருவதாகவும், சீனவும் அமெரிக்காவும் பாகிஸ்தானுக்கு உதவியாக இருந்துவருவதாகவும் பாகிஸ்தான் மக்களிடம் கூறிவந்தது; சீனப படைகள் இந்தியாவில் புகுந்து விட்டதாகக்கூட மக்களை நம்ப வைத்திருக்கின்றனர்; இந்நிலையில், தோல்வியையும்--சரணகதியை யும் கேள்வியுற்ற பாகிஸ்தான் மக்கள ஆத்திரமடைந்திருக்கின்றனர்; நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களும்--வன்முறைகளும நடைபெற்றன; யாகியா கானைப் பதவியை விட்டு இறக்கி விசாரணை செய்ய வேண்டுமென்றும், அவரைத் தூக்கிலிட வேண்டுமெனறுகூட மக்கள் கோரினர். இந்த நிர்பபந்தம் காரணமாகவே யாகியா கான் பதவியை விட்டு விலகியிருக்கிறர்.

பாகிஸ்தானில் சிவில் நிர்வாகம் அமையவிருப்பதை, பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன் ராம் ஏற்கனவே வரவேற்றுப் பேசியிருககிறர்.

துணைக் கண்டத்தில் ஏற்பட்டுவிட்ட உண்மை நிலையை உணர்ந்து செயல்பட்டு வரவேண்டியது இனிமேல் பாகிஸ்தான் புதிய ஆட்சியின் பொறுப்பாகும்.

தலைமையமைச்சர் இந்திராவும், பாகிஸ்தான் மக்களிடம் இந்தியா நேசமாக இருக்க விருமபுவதாக அடிக்கடி கூறிவந்திருக்கிறர்.

ஆனல் பாகிஸ்தான், இந்தியாவை நண்பனைகக் கருதுகிறதா-- எதிரியாகக் கருதுகிறதா என்பதை, அதன் செயல்களைக் கொண்டே முடிவு செய்ய வேண்டும்.

இதுவரை இலட்சம்பேர்

புதுடில்லி, டிச. 21—
வங்காள தேசத்தில் ஆங்காங்கு இருந்த பாகிஸ்தான் இராணுவத்தினர் அனைவரும் இந்திய வீரர்களிடம் சரணடைந்துவிட்டனர்.

டாக்காவில் நடந்த ஒரு விழாவில் மட்டும் 1,000 இராணுவ அதிகாரிகளும், 30,000 சிப்பாய்களும் சரணடைந்தனர்.

முதல் நாளில் 47,000 இராணுவத்தினர் சரணடைந்தனர்; நேற்று முன்தினம் வரையில் சரணடைந்தவர்களின் எண்ணிக்கை 1 இலட்சம் ஆகியது.

யாகியாகானின் அந்திய காலம்

ஈரானில் குடியேறிவிட முடிவாம்

இராவல்பிண்டி, டிச. 21—
முன்னள் பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் நாட்டைவிட்டு வெளியேறி ஈரானில் குடியேறப் போவதாக இங்கு பலமான வதந்திகள் அடிபடுகின்றன.

இதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுவருவதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அயூப்கானிடமிருந்து 1969 மார்ச 25-ம் நாள் பொறுப்பை ஏற்றுக் கொண்ட யாகியா கான், 2 ஆண்டும் 270 நாட்களும் பதவி வகித்திருக்கிறர்.

25 ஆண்டுகளில் 10 ஆட்சிகள் கவிழ்ப்பு

பாகிஸ்தான் வரலாற்றில் மக்களாட்சி படும்பாடு

பூட்டோவின் 'தர்பார்' எத்தனை நாள்?

புதுடில்லி, டிச. 21—
இதுவரை பாகிஸ்தானில் 10 அரசுகள் கவிழ்ந்து இப்பொழுது 11-வது அரசு பொறுப்பு ஏற்றிருககிறது.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிந்தபோது, 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி முதல் அரசாங்கம் பதவியேற்றது; முகமது அலி ஜின்ன பாகிஸ்தானின கவர்னர் -- ஜெனரலாக இருந்தார்.

அதைத் தொடர்ந்து மொத்தம் 11 ஆண்டுகளில் 7 அரசுகள் பதவி ஏற்றுக் கவிழ்ந்துவிட்டன.

1958-ம் ஆண்டில் முதன்முதலாகப் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி கொண்டுவரப்பட்டது; இது பாகிஸ்தானின் 8-வது அரசு ஆகும்.

1958 அக்டோபர் 8-ந் தேதி அயூப் கான், பாகிஸ்தான இராணுவத் தளபதியாகவும், இராணுவச் சட்ட நிர்வாகியாகவும பதவியேற்ருர்.

அதே ஆண்டு அக்டோபர் 27-ந் தேதி, பாகிஸ்தான தலைமையமைச்சராக அயூப் கான பதவியேற்ருர்; அன்றையத் தினமே அவா குடியரசுத தலைவராக இருந்த இஸ்கந்தர் மிர்சா என்பவரைக் கவிழ்த்துவிட்டுப் பாகிஸ்தான் அதிபராக ஆனர்; அப்பொழுது யாகியா கான், இராணுவத தளபதியாக இருநதார்.

1969-ம் ஆண்டு மார்ச் 25-ந் தேதி, அயூப் கானைப் பதவியிலிருந்து இறககிவிட்டு, யாகியா கான், பாகிஸ்தானின் சர்வாதிகாரி ஆனர்; இது, பாகிஸ்தானின் 10-வது ஆட்சியாகும்.

யாகியா கானுக்கு எதிராக இப்பொழுது மககள் ஆர்ப்பாட்டம் நடத்துயதால், அவர், பதவியிலிருந்து விலக முடிவு செய்தார்; எனவே, நேறறு பதவியிலிருந்து விலகி, பூட்டோவிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டார்.

10 ஆட்சிகள் கவிழ்ந்த பிறகு 11-வது ஆட்சியாக பூட்டோ ஆட்சி ஏற்பட்டிருக்கிறது.

இழப்பீடு பற்றி அதிகாரி

புதுடில்லி, டிச. 21—
போரில் ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீடு கோரும் பிரச்சினை பறறி அதிகாரபூர்வ தொடர்பாளர் ஒருவர் கருத்துக் கூற மறுத்துவிட்டார்.

"நம மீது பாகிஸ்தான் திணித்த போருககாக அதனிடமிருந்து இழப்பு ஈட்டை இந்தியா கோருமா?" என்று கேட்டபோது, 'கருத்துக் கூறுவதற்கில்லை' என்று அந்தத் தொடர்பாளர் கூறினர்.

'வீரச் சக்கர' விருது பெற்ற ஆறுமுகம் குடும்பத்திற்கு உதவி

மூன்று ஏக்கர் நிலமும்--ரூ. 5,000-மும் தமிழ்நாடு அரசு வழங்குகிறது

வேலூர், டிச. 21—
போர் முனையில் வீரச்செயல் புரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் ஆறுமுகம் குடும்பத்திற்குத் தமிழக அரசு, மூன்று ஏக்கர் நிலமும் – ரூ. 5,000-மும் வழங்குகிறது.

இத்தகவலை, வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியாளர் தர்மராஜ் தெரிவித்தார்.

வீரர் ஆறுமுகம், வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரை அடுத்த தாதவள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர்.

இராணுவத்தில் 'கன்னர்' ஆக பணியாற்றி வந்தார்.

ஸ்ரீநகர் விமான நிலையத்தில் அவர் பணியாற்றுகையில், பாகிஸ்தான் விமானங்கள் தாக்குதல் நடததின; தலையில் குண்டு பாய்ந்த நிலையிலும் அவர், பாகிஸ்தான் விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்திய பிறகே வீர மரணம் அடைந்தார்.

ஆறுமுகத்தின் வீரச் செயலைப் பாராட்டும் வகையில், அவருக்கு 'வீரச் சக்கர' விருது வழங்கப்பட்டது.

இப்போது அவருடைய குடும்பத்துக்குத் தமிழக அரசு, 3 ஏக்கர் நிலமும், 5,000 ரூபாய் ரொக்கமும் கொடுக்கிறது.

அறிஞர்களைக் கொன்று குவித்த காட்டுமிராண்டி செயல்

விசாரணை நடத்த வங்க தேச அரசிடம் கோரிக்கை

முஜிப் நகர், டிச. 21—
"வங்க தேச அறிஞர்கள் பலரைக் கொன்றதற்குக் காரணமாக இருந்த 'பாகிஸ்தான் காட்டுமிராண்டி'களை விசாரிப்பதற்காக இராணுவ நீதிமன்றம் ஒன்றை நிறுவ வேண்டும்"
என்று 21 அறிஞர்கள், வங்க தேச அரசை வற்புறுத்தினர்.

அவர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை விடுத்தனர்; வங்க தேசததின் மீதிருந்த தங்களது ஆதிக்கத்துக்கு முடிவு நெருங்குவதை அறிந்து பாகிஸ்தான சிப்பாய்கள் பல வங்க தேச அறிஞர்களைக கொன்று குவித்ததாகத தெரியவந்ததும் அதிர்ச்சி அடைந்ததாக அறிக்கை கூறியது.

பாகிஸ்தானில் புதிய நடவடிக்கை

இலண்டன், டிச. 21—
பாகிஸ்தான் அரசு புதிதாக இருட்டடிப்புக் கட்டளைகள் பிறப்பித்திருப்பதாகப் பாகிஸ்தான் வானெலி அறிவித்தது.

இரவில் தெரு விளக்குகள் இராது என்றும், பெயர்ப் பலகைகளில் விளககுகள் கூடாது என்றும் வானெலி கூறியது.

"கார் விளக்குகள் மங்கலாக இருக்க வேண்டும் -- வீட்டு விளக்குகள் வெளிச்சம் வெளியே தெரியக் கூடாது" என அது கூறியது.

ஒளியோடு சேர்ந்த இருள்

இந்திரா காந்தி வேதனை

புதுடில்லி, டிச. 21—
'நமது நகரங்களில் மீண்டும் விளக்குகள் எரியும் -- ஒளி ஏற்படும்; ஆனல் பலருடைய இதயங்களில் வேதனை இருள் பரவியிருக்கும்"
என்று போரில் உயிரை அர்ப்பணித்த போர் வீரர்களையும் -- அவர்களது குடும்பத்தினரையும், மக்களவையில் உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து பேசுகையில், தலைமையமைச்சர் இந்திரா காந்தி சுட்டிக்காட்டினர்.

சேலம் உருக்காலை

'வீண் சந்தேகத்தைக் கிளப்பாதீர்'

அமைச்சர் செ. மாதவன் அறிவுறுத்தல்

"சேலம் இரும்புத் தொழிற்சாலையில் எந்தவிதமான உருக்குப் பொருள் உற்பத்தி செய்வது என்பதைத்தான் மத்திய அரசு முடிவு செய்யவேண்டும்; இது பற்றி இப்போது எடுக்கப்படும முடிவுதான் எதிர்காலத்தில் அந்தத் தொழிற்சாலையின் இலாப -- நட்டத்தை முடிவு செய்வதாக உள்ளதால் இப்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு இல்லை"
என்று சட்டப் பேரவையில் தொழில் அமைச்சர் செ. மாதவன் அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"சேலம் உருக்காலை அமையுமா' என்று சந்தேகப்படுவதற்கு இப்போது அவசியமில்லை; தமிழ்நாட்டில் உள்ளவர்களே சிலர் இந்த மாதிரிச் சந்தேகத்தைக் கிளப்பி -- வடக்கே உள்ளவர்களுக்குத் தைரியம் வரச் செய்துவிட வேண்டாம்.

இந்தியாமீது பூட்டோ பாய்ச்சல்

'பாகிஸ்தானுக்கு அவமானம் ஏற்பட்டுவிட்டது--- பழி தீர்க்காமல் விடப்போவதில்லை' என்கிறார்

தொடர்ந்து போராடப்போவதாக அச்சுறுத்தல்

அதிபராகப் பதவியேற்றவுடன் வானொலியில் புலம்பல்

புதுடில்லி, டிச. 21—

பாகிஸ்தான் குடியரசுத் தலைவராக நேற்று ஜுல்பிகர் அலி பூட்டோ பதவியேற்றார்; பதவியேற்றவுடன் அவர் வானொலிமூலம் ஆற்றிய உரையில், போரில் ஏற்பட்ட தோல்வி தற்காலிகமானது என்றும், விரைவில் இந்தப் பழி தீர்க்கப்படும் என்றும் அறிவித்தார்.

"பாகிஸ்தானுக்குப் புதிய அரசியல் சட்டம் விரைவில் வகுக்கப்படும்; ஆனால் "அதற்குமுன், இந்தியப் படைகள் தமது நாய்நாட்டிலிருந்தும், 'கிழக்குப் பாகிஸ்தா'னிலிருந்தும் வெளியேற வேண்டும்" என்றும் கூறினார்.

"இதுவரை தலைமைப் பதவியில் இருந்துவந்த சுமார் 6 இராணுவத் தளபதிகள் பதவி விலகுகின்றனர்; இதனால் அவர்கள் தங்கள் கடமைகளைத் திறமையாக நிறைவேற்றவில்லை என்பது பொருள் அல்ல; மிகத் திறமையாக அவர்கள் செயல்பட்டிருக்கின்றனர்" என்றும் கூறினார்.

தமது பேச்சில் முஜிபுர் ரகிமான் குறித்து ஏதுமே பூட்டோ குறிப்பிடவில்லை; ஆனால், அண்மையில் நடத்தப்பட்ட இடைத்தேர்தல்கள் அனைத்தையும் ரத்து செய்வதாக அறிவித்தார்.

தாம் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பேசுவதாக அவர் கூறினார்; 'நாட்டின் திறமைசாலிகளைக் கொண்ட தற்காலிக அமைச்சரவை ஒன்று அமைக்கப்படும்' என்றார்; வெளியுறவு -- இராணுவத் துறைகள் அவரிடமே இருந்து வருமாம்; எதிர்க்கட்சியினரும் இதில் உட்படுத்தப்படுவராம்.

"இராணுவ ஆட்சி தொடர்ந்து நீடித்துவரும்' என்ற கூறிய அவர், 'தேவைக்குமேல் ஒரு நிமிடம்கூட அது நீடிக்கப்படமாட்டாது' என்று தெரிவித்தார்.

மக்களின் ஆதரவு இருந்தால், இமாலயத்தைவிட உயர்ந்தவராகத் தாம் இருக்கமுடியும் என்று கூறினார்.

பதவியேற்றவுடனேயே பூட்டோ, உயர்தர இராணுவ -- சிவில் அதிகாரிகளுடன் விவாதம் நடத்தினார்; அமெரிக்கா, சீனா, இரஷ்யா, பிரிட்டன், பிரான்சு ஆகிய நாட்டுத் தூதர்களையும் சந்தித்துப் பேசினார்.

பாகிஸ்தான் அதிபராகப் பதவியேற்ற ஜுல்பிகர் அலி பூட்டோ, வானொலியில் ஆற்றிய உரை பாகிஸ்தான் மக்களை இனியும் ஏமாற்றுவதாகவே அமைந்திருந்தது.

'ஒரு பாகிஸ்தான் போர் வீரன் பத்து இந்தியப் போர் வீரர்களுக்குச் சமம்' என்றெல்லாம் பிரச்சாரம் செய்து -- மேற்குப் பாகிஸ்தானியரைப் போர் வெறியர்களாக்கி - சனநாயகத்தை மறந்து -- வரலாற்றின் படிப்பினையை மறந்து -- பாகிஸ்தான் இராணுவத் தலைமையினர் இழைத்த கொடுமைகளை மக்கள் அனுபவித்துவிட்ட பிறகும்கூட, பூட்டோவும் அதே தவற்றை இழைக்க -- அதே பாதையில் செல்ல முனைந்துள்ளார் என்பதை அவருடைய வானொலி உரை அமைந்திருந்தது.

பல தவறுகளை இராணுவத் தலைமையினர் இழைத்ததை பூட்டோ ஒப்புக்கொண்டிருக்கிறார்; எனினும் அவர், எல்லா வகைகளிலும் பாகிஸ்தானுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள விரும்பும் இந்தியாவுக்கு எதிராகவே செயல்பட முனைந்துள்ளார் என்பதை அவரது வானொலி உரை குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறது; 'நாடக பாணி'யிலேயே பூட்டோவின் வானொலி உரை அமைந்திருந்தது.

"இந்தியாவுடன் நடைபெற்ற 14 நாள் போரில் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட அவமானத்திற்குப் பழி தீர்க்காமல்விடப் போவதில்லை" என்று மிரட்ட முனைந்தார்!

"இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கூறுவதையெல்லாம் நான் கேட்டுத் தீரவேண்டியிருக்கிறது; என் வாழ்க்கையில் இதையெல்லாம் கேட்க வேண்டியிருக்கும் என்று நான் நினைத்ததே இல்லை" என்று பொறுமினார்!

"போர் இன்னமும் முடிந்துவிடவில்லை என்பதை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் உணர வேண்டும்; இப்போது நடந்தது — போரின் ஒரு துவக்கம்தான்; ஒரு புதிய விவகாரம் தொடங்கியிருக்கிறது -- அவ்வளவுதான்" என்று புலம்பினார்!

"தற்காலிக இராணுவ வெற்றியை ஜெகஜீவன்ராம் பெரிதாக எண்ணிக்கொள்ளக் கூடாது; இராணுவ வெற்றிகள் வரும் — போகும்; மாஸ்கோவை ஜெர்மானியர்கள் முற்றுகையிட்டனர்; ஆனால் அது எத்தனை நாளைக்கு நீடித்தது?" என்றெல்லாம் கேட்டு அச்சுறுத்த முனைந்தார்!

"கிழக்குப் பாகிஸ்தானை ஆக்கிரமித்துக் கொண்டதால், இந்தியா வெற்றிப் போதையில் ஆழ்ந்துவிட வேண்டாம்; நாங்கள் போராடுவோம்; பாகிஸ்தானின் தன்மானத்தையும் — ஒற்றுமையையும் நிலை நாட்டுவதற்காகத் தொடர்ந்து போராடுவோம்" என்று வீராப்புப் பேசினார்.

மனம்போன போக்கில் சென்றதன் விளைவு

அவரது உரையின் சில முக்கியப் பகுதிகள் வருமாறு:—

"தற்போது நமது இராணுவத்திற்கு ஏற்பட்ட 'தற்காலிகத் தோல்விக்கு நமது ஆட்சி அமைப்புதான் காரணம்; இதற்கு முன்பு ஆட்சி செலுத்தியவர்கள் தங்கள் மனம்போன போக்கில் நடந்துகொண்டனர்; மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாக அவர்கள் இருந்திருந்தால், இவ்வளவு தூரம் நடந்திருக்காது!

விரும்பத்தகாத சில சம்பவங்களே காரணம்

"என் உயிர் 'எப்போதோ போய்விட்டிருக்கக் கூடாதா என்றுதான் நான் இப்போது நினைக்கிறேன்; வாழ்வைக் கண்டு நான் அஞ்சுபவனல்ல -- ஆனால் அண்மையில் நடைபெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்கள்தான் இதற்குக் காரணமாகும்.

தோற்கவே இல்லையாம் -- வெற்றி பெற்றே தீருவாராம்

"போரில் நாம் தோற்கவில்லை -- வெற்றி பெற்றிருக்கிறோம்; நமக்குக் கிடைத்திருப்பது அரசியல் வெற்றி; இது இராணுவ வெற்றியையும்விட மிகவும் உயர்ந்தது!

"இப்போது நடந்துள்ளதைப் பாகிஸ்தான் மக்கள் ஏற்றுக்கொள்ளவேமாட்டார்கள்; 'ஒரே பாகிஸ்தான் வேண்டும்' என்பதற்காக போராடியே தீருவர்!

வெளியார் தலையீடு இருக்கக் கூடாதாம்

"கிழக்குப் பாகிஸ்தான் பிரச்சினையில், நீதியின் அடிப்படையிலான ஒரு அரசியல் தீர்வுதான் தேவைப்படுகிறது; அதுவே இறுதியானது!

"கிழக்குப் பாகிஸ்தானுடன் ஒரு கௌரவமான -- நியாயமான உடன்படிக்கை செய்துகொள்ள நாம் தயாராக இருக்கிறோம்; ஆனால் அதில் வெளியார் தலையீடு இருக்கக்கூடாது; அந்த ஒப்பந்தம் நமக்குள்ளாகவே இருக்கவேண்டும்!

வெட்கப்படுவதற்குக் காரணம் இல்லையாம்

"பாகிஸ்தானில் 1970 டிசம்பரில் நடந்த தேர்தல்கள் பற்றி இந்தியா பெரிதாகப் பேசுகிறது; அந்தத் தேர்தல்களைப் பற்றி நான் வெட்கம் கொள்ள ஏதும் இல்லை; ஏனென்றால், எனது கட்சி ஒரு நிலையான கட்சியாகும்; அந்தத் தேர்தல்களில் நாங்கள் பெரும் வெற்றியடைந்தோம்!

"1970 டிசம்பர் தேர்தல்களின் முடிவு, பாகிஸ்தான் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இந்தியா கூறுகிறது; அதை அடிப்படையாகக்கொண்டு பிரச்சினையை மாற்ற முயலுகிறது; ஆனால் சர்வதேச அரங்கில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக 104 நாடுகள் கூறிய தீர்ப்பை ஏற்க இந்தியா மறுத்தது ஏன்? சர்வதேசத் தேர்தல் முடிவை இந்தியா உணராதது ஏன்?

வன்மைமிக்க எதிரியைச் சந்திக்க நேரிடுமாம்

"நியாயம் -- நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒரு தீர்வுக்கு இந்தியா இணங்காவிடில், அது ஓர் உக்கிரமான எதிரியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்."

பிடிபட்ட கப்பல்கள் நிலை

இந்திய அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, டிச. 17—

இந்தியாமீது பாகிஸ்தான் போர்ப் பிரகடனம் செய்ததும் -- வங்காள தேசத்துக்கு உள்ள பாகிஸ்தான் இராணுவத்துக்கு ஆயுதங்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்களை மடக்கிப் பிடிக்கும்படி இந்தியக் கப்பற் படைக்கு உத்தரவிடப்பட்டதும் தெரிந்ததே; அதைத் தொடர்ந்து, ல பாகிஸ்தான் கப்பல்கள் இடைமறிக்கப்பட்டு இந்தியத் துறைமுகங்களுக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கின்றன.

இந்தக் கப்பல்களும் -- அவற்றில் இருந்த சரக்குகளும் பறிமுதல் செய்யப்பட்டதாகக் கருதப்படும் -- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

இந்தத் தகவலை, நாடாளுமன்ற மேலவையில், ஆயுத உற்பத்தித் துறை இணையமைச்சர் வி. சி சுக்லா அறிவித்தார்.

பாகிஸ்தானுக்கு ஆயுதம் ஏற்றிச் சென்ற வேறு நாட்டுக் கப்பல்கள் பலவற்றையும், இந்தியக் கப்பற்படை கைப்பற்றி வைத்திருக்கிறது.

இந்தக் கப்பல்களிலுள்ள சரக்குகளைத் திருப்பிக் கொடுப்பதா -- பறிமுதல் செய்துவிடுவதா என்பது பற்றி முடிவு செய்வதற்குக் கல்கத்தா -- பம்பாய் -- விசாகப்பட்டினம் ஆகிய 3 இடங்களில் அமைக்கப்படும்; அந்த நீதிமன்றங்களில், சம்பந்தப்பட்ட நாடுகள், தங்கள் முறையீடுகளைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

பூச்சி மருந்து தெளிக்க ஹெலிகாப்டர்

தமிழக அரசு வாங்கும்

சென்னை, டிச. 21—

"பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளிக்க பயன்படுத்துவதற்கு நான்கு ஹெலிகாப்டர்களை சென்னையில் நிரந்தரமாக வைத்துவிடத் தமிழக அரசுக்கு மத்திய அரசு உறுதி தெரிவித்திருக்கிறது"

என்று வேளாண்மை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

"பூச்சி மருந்து தெளிக்கத் தமிழக அரசாங்கமே இரு ஹெலிகாப்டர்களை சொந்தத்தில் வாங்கிவிட அரசு கொள்கையளவில் முடிவு செய்திருக்கிறது" என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

புயல் எச்சரிக்கை தரும் கருவி

சென்னையில் அடுத்த ஆண்டு அமையும்

புவனேசுவரம், டிச. 21—

புயல் அபாயம் பற்றி முன்கூட்டியே எச்சரிக்கவும் -- ஆராய்ச்சிகள் நடத்தவும் வட்டார வானிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை சென்னையில் நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கிறது

இந்த நிலையத்தின் அமைப்புப் பணிகள் அடுத்த ஆண்டு துவங்கும் என்று இங்கு அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக வானிலை ஆராய்ச்சி நிறுனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த நிலையம் தென் கிழக்கு ஆசிய நாடுகள் அனைத்திலும் புயல் அபாயம் பற்றி முன்கூட்டியே ஆராய்ந்து எச்சரிக்கை செய்யும்.

தூத்துக்குடி உர ஆலை

பிரிட்டன் உதவி

புதுடில்லி, டிச. 21—

தூத்துக்குடி உர ஆலையை அமைக்க அதிகபட்சம் 75.7 இலட்சம் பவுண்டு ஸ்டர்லிங்குக்கு (ரூ 13.93 கோடி) உட்பட்ட தொகையை பிரிட்டன் உதவி நிதியாக அளிக்கும்.

தெற்கு பெட்ரோ கெமிகல் தொழில்கள் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்த உர ஆலையை நிர்மானித்து நடத்தும்.

பத்திரிகை விலைக் கட்டுப்பாடு

நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல்

புதுடில்லி, டிச. 20—

பத்திரிகைகளின் விலைகளைக் கட்டுப்படுத்த வகை செய்யும் மசோதாவை, இன்று நாடாளுமன்றத்தில் அமைச்சர் திருமதி நந்தினி சத்பதி தாக்கல் செய்தார்.

பத்திரிகைகள், மக்களுக்குச் சிறந்த தகவல் சாதனமாகப் பயன்படவும், பத்திரிகைகள் நியாய விலையில் மக்களுக்குக் கிடைக்கவும் மக்கள் நலனைக் கருதி இந்த மசோதா கொண்டு வரப்படுவதாக திருமதி நந்தினி சத்பதி கூறினார்.

சென்னைப் பெருநகர் திட்டம்

சென்னை, டிச. 21—

"சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்கான ரூ. 938 கோடி செலவாகும் இருபதாண்டுக் காலத் திட்டம் இந்த ஆண்டு ஜுன் மாதத்தில் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது; அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான குறுகிய காலத் திட்டம் ரூ. 185 கோடி செலவானதாகும்; இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசிடமிருந்தும் -- உலக பாங்கியிடமிருந்தும் நிதியுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகவலை, சட்டப்பேரவையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அறிவித்தார்.

"இத்திட்டத்தின்படி, 450 சதுர மைல்களுக்கு உள்ளாக ஒட்டிய பகுதிகளே சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்படும்" என்றார் அவர்.

பூட்டோவின் வெறுங்கனவு-

வங்க தேச மக்களை உடன்பாட்டுக்கு அழைக்கிறார்

முஜிபுர் ரகிமானை மதிக்காதவர் 'முஸ்லிம் வங்காள தேசம்' என்று உரிமை கொண்டாடுகிறார்

புதுடில்லி, டிச. 20 —

"வங்காள தேசம், பாகிஸ்தானின் பிரிக்க முடியாத அசைக்க முடியாத பகுதியாகும்.

'பாகிஸ்தான் கட்டுக்கோப்புக் குட்பட்டு, கிழக்குப் பாகிஸ்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

'ஒன்றுபட்ட பாகிஸ்தான் கொள்கைக்கு உட்பட்டு அந்தத் தீர்வு இருக்கவேண்டும்.

"அந்நியத் தலையீடு இன்றி நிச்சயமாக அந்நிய ஆக்கிரமிப்பும் இந்திய ஆக்கிரமிப்பும் இல்லாமல், கிழக்கு — மேற்குப் பாகிஸ்தான் தலைவர்களிடையேயும், மக்களிடையேயும் உடன்பாடு ஏற்பட வேண்டும்.

'முஸ்லிம் வங்காளம் இப்போதும் பாகிஸ்தானின் பகுதியாகவே இருக்கும்; முஸ்லிம் வங்காளம் எப்போதும் முஸ்லிம் அமைப்பாகவே இருக்கும்"

என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, பதவியேற்றபிறகு தம்முடைய நாட்டு மக்களுக்கு வானொலியில் நிகழ்த்திய உரையில் கூறினார்; அவர் மேலும் கூறியதாவது:—

பூட்டோ தம்முடைய உரையில், இப்போது மேற்குப் பாகிஸ்தான் சிறையில் இருக்கும் ஷேக் முஜிபுர் ரகிமான் பற்றியோ அல்லது அவருடைய அவாமி லீக் பற்றியோ குறிப்பிடவில்லை.

"கிழக்கு வங்காள சகோதரர்களுக்கு மேற்குப் பாகிஸ்தான் சில தவறுகளைப் புரிந்திருக்கிறது" என்பதைப் பூட்டோ ஒப்புக்கொண்டார்.

'வெளியார் தலையீடின்றி எங்களுடன் அரசியல் உடன்பாட்டுக்கு வரவேண்டும்" என்று கிழக்கு வங்காள மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

"பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரே பாகிஸ்தான் என்ற கொள்கையின் கட்டுக்கோப்புக்குட்பட்டு அரசியல் தீர்வு காண்பதற்கு மேற்கு பாகிஸ்தான் மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்" என்றார்.

"கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியப் படைகள் திரும்பப் பெறப்பட வேண்டும்" என்றார்.

பாகிஸ்தானில் இருந்த இந்தியத் தூதுவர்கள்

இந்தியா வந்தடைந்தனர்

புதுடில்லி, டிச. 20—

கராச்சி, இசுலாமாபாத் ஆகிய இடங்களில் இருந்துவந்த இந்தியத் தூதுவர்கள் -- தூதுவரக அதிகாரிகள் இன்று விமான மூலம் புதுடில்லிக்கு வந்து சேர்ந்தார்கள்.

தமிழக அரசு செலுத்த வேண்டிய கடன்

கால தவணை கேட்டு வற்புறுத்தல்

சென்னை, டிச. 17—

"மத்திய அரசுக்குச் சேர வேண்டிய நடப்பு ஆண்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குக் கால அளவினை மாற்ற 1969—1970-ம் ஆண்டுகளில் மாநில அரசு கோரியுள்ளதா? அதற்கு மத்திய அரசு தந்துள்ள பதில் என்ன?"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் சு. துரைசாமி வினவினார்.

முதல்வர்:— "ஆம்; இந்திய அரசு இரண்டு ஆண்டுகளில் கடன் தவணைக்கான கால அளவை நீட்டிக்க -- அதாவது, அக்டோபர் திங்கள் முதல் நாள் செலுத்த வேண்டிய கடன் தவணையை, அந்த நிதியாண்டின் முடிவுக்குள் செலுத்தலாம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறது; அந்த ஆண்டினை -- கடந்த கால அளவினை நீட்டிக்க ஒப்புக்கொள்ளவில்லை."

க. துரைசாமி:— "தமிழ் நாட்டில் உணவு உற்பத்திக்கான ஆக்க திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு கடன் தவணைகளைத் தள்ளிவைக்க வேண்டுமென்று நாம் கேட்டோம்; மீண்டும் அதை எடுத்துக்கூறி வற்புறுத்துவீர்களா?"

முதல்வர்:— "நிதிப் பிரச்சினையில் தொடர்ந்து நாம் வற்புறுத்திவருவோம்; நேரடியாகப் பேசியும் வருகிறோம்."

கே. எம். சுப்பிரமணியம்:— "நகராட்சிகள், மாநகராட்சி ஆகியவை தமிழக அரசிடம் வாங்கியுள்ள கடன்களைத் திருப்பிச் செலுத்த இம்மாதிரி கால நீட்டிப்பு அளிக்கப்படுமா?"

முதல்வர்:— "சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்!"

என். வீராசாமி:— "நாம் செலுத்த வேண்டிய பழைய கடன்களை இரத்துச் செய்ய மத்திய அரசைக் கேட்கலாம் அல்லவா?"

முதல்வர்:— "கடன் தவணைகளைத் தள்ளி வைக்கத் தயங்கும் மத்திய அரசு, இரத்து செய்யச் சொன்னால் என்ன செய்யும்?"

வீர மரணம் எய்திய வீரர் குடும்பத்துக்கு உதவித்தொகை

வயதான தாயாரிடம் கலெக்டர் அளித்த உருக்கமான நிகழ்ச்சி

உதகை, டிச. 21—

போரில் உயிர்துறந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பி. அலனின் (22 வயது) தாயாருக்கு தமிழ்நாடு அரசு ரூ. 5,000 உதவித் தொகை அளிக்க அனுமதித்தது. அலனின் தாயாரை நீலகிரி மாவட்டக் கலெக்டர் ஜே. சிவகுமார் நேரில் சந்தித்து உதவித் தொகையை வழங்கினார்.

பி. அலன், வெல்லிங்டனிலுள்ள சென்னை ரெஜிமெண்டல் சென்டரைச் சேர்ந்தவர்.

உதகையிலிருந்து 30 கிலோ மீட்டர் (19 மைல்) தூரத்தில் குந்தாவில் மஞ்சூர் என்னுமிடத்தில் அலனின் வயதான தாயார் மதி அம்மான் இருக்கிறார்; சென்ற வியாழக்கிழமையன்று கலெக்டர் மஞ்சூர் சென்று, அலனின் தாயாரிடம் உதவித் தொகையை அளித்தார்.

"என் புதல்வன் விடுமுறை எடுத்துக்கொண்டு வரப்போவதாக எழுதியிருந்தான்; திருமணம் செய்துகொள்ளப்போவதாகவும் பெண் பார்த்து வைக்குமாறும் கடிதத்தில் எழுதியிருந்தான்; நான் பெண் பார்த்து வைத்திருந்தேன்; ஆனால் என் பையன் வருவதற்குப் பதிலாக அவனது மரணச் செய்திதான் வந்தது"

என்று மதி அம்மாள் கண்களில் நீர்மல்கக் கலெக்டரிடம் கூறினார்.

கலெக்டர் மதி அம்மாளைத் தேற்றி 'தங்களுக்கு அரசு எல்லா உதவிகளையும் அளிக்கும்' என்று உறுதியளித்தார்.

அலன் குடும்பத்துக்கு அரசு நிலத்தில் 3 ஏக்கர் வழங்கும்படி அவர் கிராம அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

தமிழக அரசின் இந்த உதவிக்கு மதி அம்மாள் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

கிராமங்களுக்குக் குடிநீர்க் கிணறுகள்

38 இலட்சம் செலவில் நடவடிக்கை

சென்னை, டிச. 21—

"வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த பகுதிகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டத் தமிழக அரசு மேலும் நிதி ஒதுக்கம் செய்துள்ளது உண்மையா?

என்று சட்டப் பேரவையில் ஓர் உறுப்பினர் கேட்டபோது, உணவு வருவாய்த் துறை அமைச்சர் ம. உ. சண்முகம் தெரிவித்த பதில் வருமாறு:—

"ஆம்; வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிராமங்களிலும் -- சிற்றூர்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப் புதிதாகக் குடிநீர்க் கிணறுகளைத் தோண்ட 11—10—71 அன்று ரூ. 38 இலட்சம் வழங்கி அரசு உத்தரவிட்டது; இதன்படி, நெல்லை -- முகவை -- கோவை -- தென் ஆற்காடு -- சேலம் -- மதுரை ஆகிய மாவட்டங்களுக்கு தலா ரூ. 5 இலட்சமும், திருச்சிராப்பள்ளி -- வட ஆற்காடு மாவட்டங்களுக்குத் தலா ரூ 3 இலட்சமும், தருமபுரி மாவட்டத்துக்கு ரூ. 2 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

புதிய தகவல் கோள்

அமெரிக்கா செலுத்தியது

நியூயார்க், டிச. 20—

புதிய தகவல் கோள் ஒன்றினை அமெரிக்கா வானவெளியில் செலுத்தியுள்ளது.

அட்லாண்டிக் கடலுக்குமேல் 35 கிலோ மீட்டர் தொலைவில் செலுத்தப்பட்டுள்ள இந்தக் கோள், தென் அமெரிக்கா -- வட அமெரிக்கா -- மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே தொலைபேசி -- வானொலி -- வர்த்தகச் செய்திகளை அஞ்சல் செய்யும்.

சுயநலமற்ற சேவை

நிவாரண ஏற்பாடுகளை நிர்வகிப்பது, வியாபாரத்தை நிர்வகிப்பதைவிட அதிகப் பொறுப்பு வாய்ந்தது. இதற்குத் தேர்ச்சி மட்டுமின்றி, 'சுயநலமற்ற சேவை' என்னும் மனப்பான்மையினால் உந்தப் பட்ட மக்களின் ஈடுபாடு மிக அவசியம், வெள்ளம், பஞ்சம் மற்றும் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேர்முகமான நிவாரணம் அளிப்பதற்காக முகாம்களிலிருந்து கொண்டு இன்முகத்துடன் செயல்பட வேண்டும். டாடா ஸ்டீலின் ஊழியர்களிடையே இத்தகைய சேவைக்கான தொண்டர்கள் பலர் உள்ளனர். கடந்த சில மாதங்களாக எங்கள் டாக்டர்கள், சமூகத் தொண்டர்கள் மற்றும் எஞ்ஜினியர்கள் கொண்ட குழுவினர் பீகாரிலுள்ள கிஷன்கஞ்ஜ் என்னுமிடத்தில் முகாமிட்டுக்கொண்டு சுமார் 7000 பங்களா தேஷ் அகதிகளுக்கு வைத்திய சிகிச்சை, அதிகப்படியான போஷாக்கு, துணிகள் மற்றும் போர்வைகள் வழங்குதல், சுத்தமான குடிநீர் வசதி மற்றும் சுகாதார ஏற்பாடு இவைகளைச் செய்து வருகின்றனர்.

எங்கள் பலம் உறுதிமிக்க எஃகில் மட்டுமல்ல திறமை மிக்க ஊழியர்களிலும் உள்ளது



'வருங்காலத் தலைமுறையினரின் நலம் பேணுவோம்'

'கல்வி வளரவும் -- உடல்நலம் காக்கவும் திட்டங்கள் வகுப்போம்'

பேராசிரியர் க. அன்பழகன் விடுத்த பிறந்த நாள் செய்தி

சென்னை, நவ. 21—

நமது ஐம்பதாவது பிறந்த நாளையொட்டி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பின்வரும் செய்தியினை விடுத்துள்ளார் :-

"எனது ஐம்பதாவது பிறந்த நாளில் எனக்கு வாழ்த்துக் கூறிய எனது அருமைத் தோழர்கள் முதல்வர் கலைஞர்--அமைச்சர் நாவலர்--புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., சட்டமன்ற மேலவை—பேரவைத்தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், மேயர்--துணை மேயர், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர மன்ற ஒன்றியத் தலைவர்கள் -- உறுப்பினர்கள், கழக முன்னணித் தோழர்கள், தொகுதி மக்கள், மாணவ--மாணவியர், சீரணித் தோழர்கள், அரசு அலுவலர்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இந்தப் பிறந்த நாளில், நமது நாடு மகத்தானதொரு வெற்றியைப் பெற்று -- வரலாற்றில் முக்கியமான கட்டத்தைக் கடந்து -- உலக நாடுகளின் நன்மதிப்பைப் பெற்று அமைதியான வாழ்வினை மக்களுக்கு வழங்கக்கூடிய ஆற்றல் பெற்றிருப்பது எண்ணிப் பூரிப்படைகிறேன்.

"இந்திய அரசின் தலைமையமைச்சரும் -- தமிழக முதல்வரும் -- நாட்டு மக்களும் நிலையான வெற்றியை ஈட்டுவதிலும் -- நிலைநாட்டுவதிலும் கொண்டுள்ள உறுதியைப் பாராட்டிடும் உணர்வு பெறுகிறேன்.

"தமிழக மக்களின் நல்வாழ்வு வளரும் தலைமுறையினரின் உடல் நலத்தைப் பொறுத்தே அமையுமாதலின், இளந் தலைமுறையினர் உடல் நலத்தை ஆராய்ந்து -- தேவைப்படுபவர்கட்குத் தக்க மருத்துவம் அளிக்கும் ஒரு திட்டத்தை அரசுத் துறையினர் மேற்கொள்ளவேண்டும் எனும் எனது விருப்பத்தையே பிறந்த நாள் செய்தியாக வழங்க விரும்புகிறேன்.

"தமிழக அரசின் கல்வித் துறை -- நல்வாழ்வுத் துறை -- சமூக நலத் துறை மூன்றும் இணைந்து, உள்ளாட்சிமன்றங்கள் -- பள்ளி நிர்வாகிகள் ஆகியோருடைய ஒத்துழைப்போடு, உயர்நிலைப் பள்ளி மாணவர் -- பள்ளியில் சேருவதற்கு முற்பட்ட சிறுவர்கள் ஆகிய மூன்று கட்டத்திலும், மருத்துவப் பரிசோதனைக்கு வழிவகுக்க வேண்டும் என்பதே என் அவா.

"அதற்கான திட்டத்தை வகுத்திடவும்--தொடங்கவும் முயற்சி எடுத்துக்கொள்வேன் என்பதையே இந்த நாளில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"பிறந்த நாள் வாழ்த்துக்களைப் பெற்ற நான் எனது கடமையினை உணர்ந்து -- தொடர்ந்து மக்களுக்காக நற்பணி ஆற்ற உறுதி கொள்கிறேன்."

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

டிச. 22 பிற்பகல் 3-மணி : வடமாதிமங்கலம் — சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம் --- அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தல்-- அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் 'அறிஞர் அண்ணா கலை அரங்கம்' அடிக்கல் நாட்டு விழா-- கழக வரவேற்பு; மாலை 5-30 மணி: போளூர் — அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பொன்விழா நிகழ்ச்சிகள் ; இரவு 8-மணி : வங்காள தேச விடுதலை நாள் விழா.

டிச. 23 மாலை 4-மணி : வாலாஜாபேட்டை—நகராட்சி வரவேற்பும், புதிய அங்காடிகள் திறப்பு விழாவும் ; 6-மணி : சோளிங்கபுரம்—ஊராட்சி ஒன்றியத்தில் அறிஞர் அண்ணா திருவுருவப் படத் திறப்பும், வரவேற்பும் ; இரவு 7-30 மணி : பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-15) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சரணடைந்த பாகிஸ்தான் தளபதிகள்

இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டனர்

கல்கத்தா, டிச. 21—

வங்க தேசத்தில் சரணடைந்த பாகிஸ்தான் தளபதி ஜெனரல் நியாசியும், கவர்னருக்கு ஆலோசகராக இருந்த ஜெனரல் பர்மன் அலியும் டாக்காவிலிருந்து தனி விமானம் ஒன்றில் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

கல்கத்தாவிலிருந்து யாருக்கும் தெரியாத ஓர் இடத்திற்கு இவர்கள் கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

இவர்களன்றி, சுமார் 2,500 பாகிஸ்தான் போர்க் கைதிகளும் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர்.

ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் சிப்பாய்கள் இன்னமும் குல்னா இராணுவ முகாம்களில் இருந்து வருவதாகவும், இவர்களை இந்தியாவுக்குக் கொண்டுவரும் மாபெரும் வேலையை இராணுவத்தினர் துவங்கிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்ட பாகிஸ்தான் மேஜர் ஒருவர் தாம் இங்கு தனது நாட்டில் இருப்பதுபோலவே உணருவதாகத் தெரிவித்தார்; இந்தியர்கள் எங்களிடம் எந்தவிதக் கோபத்தையும் காட்டுவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

"வங்க தேசத்தில் வங்காளிகளின் வெறுப்புக்கு ஆளாகி இருந்த பாகிஸ்தான் இராணுவத்துக்கு இந்திய இராணுவம் பாதுகாப்புத் தந்து காப்பாற்றியது" என்று அவர் கூறினர்.

வங்க தேசம் -- உலக நாடுகளின் ஒப்புதலைப் பெற முயற்சி

புதுடில்லி, டிச. 21—

புதிதாகத் தோன்றிய வங்க தேசத்தை விரைவில் அங்கீகரிக்கச் செய்வதற்காக இங்குள்ள வங்க தேசத் தூதரகம், பல்வேறு நாடுகளின் தூதரகங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது; விரைவிலேயே பதில்கள் கிடைக்குமென நம்பப்படுகிறது.

அடுத்த வாரத்திற்குள் வங்க தேசத்தைப் பிரிட்டிஷ் அரசு அங்கீகரிக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

டிச. 22 மாலை 4 45 மணி : வடமாதிமங்கலம் (போளூர் தொகுதி) — பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 6 மணி: போளூர்—உயர்நிலைப் பள்ளி பொன்விழா; இரவு 8 மணி ; போளூர்—பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் கண்டனப் பொதுக்கூட்டம்.

டிச. 23: கரூர் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

டிச. 24 காலை 9 மணி : துறையூர்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பும் -- விவசாயக் கிடங்குத் திறப்பு விழாவும் ; 10-15 மணி : சொக்கநாதபுரம் — பள்ளிக் கட்டடத் திறப்பு; 11-30 மணி : வேலாயுதம்பாளையம்—மேல்மட்ட நீர்த் தொட்டித் திறப்பு ; நண்பகல் 12 மணி : க. பாளையம்—மேல்மட்ட நீர்த் தொட்டித் திறப்பு ; பிற்பகல் 12-45 மணி : சின்னசேலம் பள்ளிக் கட்டடத் திறப்பு ; மாலை 4 30 மணி : நரசிங்கபுரம் — மேல்மட்ட நீர்த் தொட்டித் திறப்பு ; மாலை 5-30 மணி : அரங்கநாதபுரம் — மேல்நிலை நீர்த் தொட்டியும் பள்ளிக் கட்டடத் திறப்பும் ; 6 30 மணி : செங்காட்டுப்பட்டி—பள்ளிக் கட்டடத் திறப்பு : இரவு 7-30 மணி : துறையூர்—பொதுக்கூட்டம்.

டிச. 25 முற்பகல் 11 மணி : திருச்சி—டீசல் எஞ்சின் நிலைய அடிக்கல் நாட்டு விழாவிற்குத் தலைமைதாங்கல் ; பிற்பகல் : திருவெறும்பூர்த் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம்

நிகழ்ச்சிகள்

டிச. 22 காலை 9-மணி : திருச்செங்கோடு தொகுதி—பள்ளிக் கட்டடத் திறப்பு விழா, குமாரபாளையம்; 10-மணி: அக்ரகாரம் விவசாயிகள் கூட்டம்; 11-30 மணி: பள்ளிபாளையம் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவும் -- பட்டா வழங்கலும்; மாலை: 5-மணி: திருச்செங்கோடு ஒன்றியக் கிடங்கு அடிக்கல் நாட்டு விழா; 6-மணி: வங்க தேச விடுதலை விழா -- இந்தியப் பாதுகாப்பு நாள் பொதுக்கூட்டம் -- திருச்செங்கோடு; இரவு 7-மணி: அரிமா சங்கம் நிகழ்ச்சி; 8-மணி: குமாரபாளையம்--வங்க தேச விடுதலை விழா--இந்தியப் பாதுகாப்பு நாள் பொதுக்கூட்டம்.

தமிழக மாவட்ட போலீசு அதிகாரிகள் மாநாடு

எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி முதல்வர் கலைஞர் விளக்கம்

சென்னை, டிச. 16—

கடந்த செப்டம்பரில் சென்னையில் நடைபெற்ற மாவட்டப் போலீசு அதிகாரிகள் மாநாடு பற்றிய விவரங்களை, சட்டப் பேரவையின் கேள்வி நேரத்தின் போது முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் விளக்கினர்.

இதன் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும் -- முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு :—

கே. ஏ. வகாப் :—"13—9—71 அன்று தமிழ்நாடு மாவட்டப் போலீசு அதிகாரிகள் மாநாடு சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றதா? 'ஆம்' எனில், அதில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் யாவை ?'

முதல்வர் :—"ஆம்; கீழ்க்காணும் பொருள்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டு அவை ஆய்விலிருந்து வருகின்றன ;—

1. மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைத்து ஆப்காரி சட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவது தொடர்பாக காவலர்களுக்குள்ள சிக்கல்கள்.
2. நாட்டு வெடிமருந்து வைத்துப் பாறைகளை உடைப்பதைத் தடை செய்வது.
3. மருத்துவமனைகளில் குற்றவாளி சிகிச்சைப் பிரிவுகள் கட்டுவது.
4. நகரங்களிலும் -- பட்டணங்களிலும், சாலைகள் -- தெருக்கள் இவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்கான சிறப்பு நடவடிக்கைகள்.
5. மாநில எல்லைச் சோதனை நிலையங்கள் வெவ்வேறு துறைகள் -- வெவ்வேறு சோதனை நிலையங்களை வைத்து வருவது ; பொதுச் சோதனை நிலையம் ஏற்படுத்துவது.
6. காவலர் செய்தித் தொடர்புகளையும் -- போக்குவரத்து வசதிகளையும்காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்.
7. துப்பறியும் முறைகளை காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்.
8. காவல்துறை சார் நிலைப் பணியாளர்களில் 80 சதவீதத்தினருக்குக் குடியிருப்பு வசதியளிப்பது என்னும் குறிக்கோள் அளவை எய்துவதற்காகக் காவலர் வீட்டு வசதித் திட்டத்தை விரிவுபடுத்துதலும், இத்திட்டத்தை அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரிகளுக்கு -- குறிப்பாக உட்கோட்ட அதிகாரிகளுக்கு நீட்டித்தலும்.
9. சென்னை மாநகர் காவலர் சட்டத்தில், ஊர்வலம் நடத்த விரும்புவோர் அந்த இடத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டருக்குக் குறைந்தது 24 மணி நேர முன்னறிவிப்பு கொடுக்க வேண்டுமென்னும் வகையில் போதிய விதித்துறை செய்தல்."

என். கிட்டப்பா :—"போலீசார் தனியே சங்கம் அமைத்துக் கொள்ளத் தங்களுக்கு உரிமை வேண்டுமென்று கேட்டார்களா ?"

முதல்வர் :—"அப்படி எதுவும் தகவல் இல்லை."

என். வீராசாமி :—'காவல்துறையைப் பொறுத்த முடிவுகள், அகில இந்திய ரீதியில் எடுக்கப்படுவதற்கான மாநாடா இது ?'

முதல்வர் :—"13—9—71-ல் நடந்தது தமிழக மாவட்டங்களின அளவில் நடந்த மாநாடாகும் -- அகில இந்திய மாநாடு அல்ல."

தேவராசன் :--"நக்சல்பாரிகளின் கொடூரச் செயல்களை ஒடுக்குவது பற்றிப் பேசப்பட்டதா ?"

முதல்வர் :—"அவை பற்றியும் பேசப்பட்டுத் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது."

தமிழகத் திட்டக் குழு அறிக்கை

வரவு--செலவுத் திட்டத்துக்கு முன்னரே கிடைக்கும்-- சட்டப் பேரவையில் முதல்வர் தகவல்

சென்னை, டிச. 16—

"தமிழகத் திட்டக் குழுவினரிடம், வருகின்ற வரவு -- செலவுத் திட்டத்துக்கு முன்னதாகத் திட்டம் பற்றிய முன்வரைவு ஒன்றைக் கொடுக்குமாறு தமிழக அரசு கோரியிருக்கிறது; அநேகமாக அப்போது இந்த முன்வரைவு கிடைத்துவிடக்கூடும்"

என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில், திட்டக் குழுபற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் தெரிவித்தார் ; இதன் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

மா. பா. சாரதி :—"தமிழ்நாடு திட்டக் குழு எப்போது செயல்படத் துவங்கும் ?"

முதல்வர் :—"தமிழ்நாடு திட்டக் குழு 17—6—71-ம் நாள்முதல் தனது பணியைத் துவங்கியது.'

கே. டி. கே. தங்கமணி : —"கிட்டத்தட்ட 6 திங்களாகியும், திட்டக் குழுவானது ஒரு இடைக்கால அறிக்கைகூடத் தரவில்லையே ?"

முதல்வர் :—"செயலாக்கக் குழு ஒன்றை அமைத்துக்கொண்டு திட்டக் குழு செயல்பட்டுவருகிறது; வருகின்ற வரவு - செலவுத் திட்டத்துக்குள் அவர்களை முன்வரைவு ஒன்றைக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம் ; அநேகமாக வருகின்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்துக்குமுன் இந்த முன்வரைவு கிடைத்துவிடுமென்று எதிர்பார்க்கலாம்."

மாவட்டத் திட்டக் குழு

ஜேம்ஸ் :—"மாவட்ட அளவிலும் திட்டக் குழுக்கள் அமைக்கப்படலாம் என்ற கருத்து முன்பு தெரிவிக்கப்பட்டதே !"

முதல்வர் :—"மாவட்ட அளவில் திட்டக் குழுக்கள் அமைப்பதாக இல்லை."

குமாரசாமி :—"மக்கள் பிரதிநிதிகளையும் -- சர்வகட்சித் தலைவர்களையும் திட்டக் குழுவில் இணைத்துக் கொள்வீர்களா ?"

முதல்வர் :—"இதில் சர்வகட்சித் தலைவர்களைச் சேர்த்துக்கொள்ளும் பிரச்சினை இல்லை ; ஆழமான சிந்தனையின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டி அளிக்கக்கூடிய மேதைகள் எவருமிருப்பின, திட்டக் குழு அவர்களைக் கலந்தாலோசிக்கும்."

காளிமுத்து :—"தமிழ்நாட்டுத் திட்டக் குழுவைப்பற்றி மைய அரசின் கருத்து என்ன ?"

முதல்வர் :—"அவர்கள் இந்த ஏற்பாட்டை வரவேற்றிருக்கிறார்கள்."

தேவராசன் :—"வரவேற்றிருக்கிறார்கள் என்றால், தமிழகத் திட்டங்களுக்காக அவர்களிடமிருந்து நிறைய பொருள் எதிர்பார்க்கலாமா ?"

முதல்வர் :—"பார்க்கலாம்."

கருநாடக மாநில தி. மு. கழகம்

பொறுப்பாளர் வேண்டுகோள்

கருநாடக மாநில தி. மு. கழகப் பொறுப்பாளர் எஸ். வி. பதி அறிவிப்பதாவது :—

"பாகிஸ்தான் போர் முடிவடைந்துவிட்டபடியால் கருநாடக மாநிலச் சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தல், 1972 பிப்ரவரி—மார்ச் திங்களில் நடைபெறுவதற்கான சூழ்நிலை ஏற்படலாமெனத் தெரிகிறது ; ஆகவே, கழக வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள், தங்களது வேட்பு மனுக்களை 23—12—71-க்குள் என்னிடம் சேர்ப்பிக்க வேண்டுமாய் கோருகிறேன்.

"என்னிடம் வருகின்ற மனுக்களை 25—12—71 அன்று கழகப் பொதுச்செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும்."

வங்க தேச -இந்தியத் தொடர்பு

மக்கள் தாராளமாகச் சென்று வரலாம்

முஜிபுர் நகர், டிச. 21—

வங்க தேசத்தில் முறையான அரசை நிறுவுவதற்காக இன்று அல்லது நாளை அதன் அமைச்சர் டாக்காவுக்குச் செல்வார் என்று தெரிகிறது.

இனிமேல் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் வங்க தேசத்துக்கும்-இந்தியாவுக்குமிடையே மக்கள் போய்வரலாம்.